# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 11 | நவம்பர் – 2016 | ₹1.00


## செயல்திறன் பயிற்சிபெற்ற பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா



ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியிலான "கோழிகளுக்கான தடுப்பூசி அளிப்பவர்" என்ற செயல்திறன் பயிற்சியை நிறைவுசெய்த பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா, பி.டெக். பட்டதாரிகளுக்குப் பணி நியமன ஆணை மற்றும் பண்ணையாளர்களுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா 31.10.2016அன்று நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் பங்கேற்று, செயல்திறன் பயிற்சிபெற்ற பயனாளிகளுக்குச் சான்றிதழ்களையும், மாணவர்களுக்குப் பணி நியமன ஆணையும், பண்ணையாளர்களுக்குக் கோழிக் குஞ்சுகள், தீவனம் மற்றும் தாதுப்புக் கலவை ஆகிய இடுபொருட்களையும் வழங்கினார். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. சி. கதிரவன் இ.ஆ.ப. அவர்கள் உரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர் பெ. சம்சுதீன் அவர்கள் நன்றி தெரிவித்தார். முன்னதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரியில் உள்ள தீவன ஆலை, குஞ்சுப் பொரிப்பகம் மற்றும் கோழிப்பண்ணை வளாகத்தைப் பார்வையிட்டுப் பின்பு மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

## கோழியின உயிர்த் தொழில்நுட்பம் குறித்த பயிலரங்கு

மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் "கோழியின உயிர்த் தொழில்நுட்பம்:மைட்டி முட்டை–பயன்பாடுசார் பரிமாற்றத்தில் முட்டை உயிர்உலையின் திறன்" குறித்த பயிலரங்கு, பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் 27.10.2016 மற்றும் 28.10.2016ஆம் நாட்களில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து, தலைமையுரை ஆற்றினார். புதுதில்லி, உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ் அவர்கள் பயிலரங்கின் பொருண்மை குறித்து உரையாற்றினார். அமெரிக்காவின் மேரிலாண்டு பல்கலைக்கழகத்தின் டாக்டர் பானு தெலுகு, கிரிஸ்டல் உயிர்அறிவியல் டாக்டர் ராப் எச்சஸ், வெங்கடேஸ்வரா



ஹேச்சரிஸ், சுகுணா புட்ஸ் நிறுவனம் மற்றும் ஜினோமிக்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகம் மற்றும் ஐதராபாத், கோழியினத் திட்ட இயக்குநரகத்தின் வல்லுநர்கள் ஆகியோர் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## முதுநிலைப் பட்டயப் படிப்புகளுக்கான புத்தாக்கப் பயிற்சி




தொலைநிலைக் கல்வி வழியில் ஆன்லைன்மூலம் வழங்கப்படும் முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் ஆறாம் பிரிவிற்கான புத்தாக்கப் பயிற்சி, பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் 07.10.2016 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்று, முதுநிலைப் பட்டயப் படிப்புகள் குறித்த விதிகள் மற்றும் விதிமுறைகளை எடுத்துரைத்தார். பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தமது துவக்கவுரையில் கால்நடை மருத்துவ அறிவியல் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ள முதுநிலைப் பட்டயப் படிப்புகள் உதவும் என்றார். முதுநிலைப் பட்டயப் படிப்புகளின் பயிற்சி இயக்குநர்கள், பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள், பாட

நூல் உருவாக்குநர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயிற்சியில் பங்கேற்று, முதுநிலைப் பட்டய மாணவர்களுடன் கலந்துரையாடினர். முதன்முறையாக, முதுநிலைப் பட்டயப் படிப்புகளில் மாணவர்கள் சேர்வதற்கு நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. முதுநிலைப் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு விண்ணப்பித்திருந்த 121 பேரில் தேர்ச்சிபெற்ற 59 பேர், 14 முதுநிலைப் பட்டயப் படிப்புகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

### மாணவர் உதவிப் பிரிவுத் துவக்க விழா



மாணவர்கள் பாடங்களைப் பதிவு செய்வதற்கும், தேர்வு முடிவுகளை அறிந்துகொள்வதற்கும் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி பெறவும் மாணவர் உதவிப் பிரிவு மற்றும் மருத்துவ வசதிப் பிரிவுகள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப் பிரிவுகளைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 07.10.2016அன்று துவக்கிவைத்தார். மேலும், துணைவேந்தர் அவர்கள் மாணவர்களுடனான கலந்துரையாடலில் இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற விருதுகள் மற்றும் பதக்கங்கள், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு உள்ள பணிப் பாதுகாப்பு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி அவர்களை ஊக்கப்படுத்தினார்.

### நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி



இலவசத் தொலைபேசி எண் 1962இல் வருகிற அழைப்பின் அடிப்படையில் பண்ணையாளர்களின் இல்லங்களுக்கே சென்று சேவை அளிக்கும் வகையில் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திச் சேவை, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களால் 08.10.2016அன்று நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவக்கிவைக்கப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியில் புதிதாக உருவாக்கப்பட்ட பெரிய பிராணிகளுக்கான உள்நோயாளிப் பிரிவு மற்றும் இரத்தச் சுத்திகரிப்புப் பிரிவு ஆகியவற்றையும் துணைவேந்தர் அவர்கள் துவக்கிவைத்தார். மேலும், “வெள்ளை அங்கி அணிவித்தல்” நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றி, நான்காமாண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். மாணவர்களுக்குச் சிகிச்சையியலாளர் அங்கியை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆய்வு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையத்திற்கு 07.10.2016அன்று வருகைதந்து, நிலையத்தின் பல்வேறு செயல்பாடுகளை ஆய்வுசெய்தார். மேலும், சமுதாய வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு அட்டவணை மற்றும் செயல்பாடுகளை ஆய்வுசெய்தார். நிலையப் பேராசிரியர்களுடன் நிலையத்தின் வளர்ச்சி மற்றும் எதிர்கால மேம்பாடு குறித்து விவாதித்தார்.

### கால்நடை உதவி மருத்துவர்களுக்குப் பயிற்சி



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைமூலம் மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவன நிதி உதவியுடன் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இனப்பெருக்கம், தீவனம் அளித்தல் மற்றும் சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி 24.10.2016 முதல் 26.10.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 30 கால்நடை உதவி மருத்துவர்கள் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் எம்.ஆர். புருஷோத்தமன் அவர்கள் நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிப் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் கையேடுகளை வழங்கினார்.

### சிறிய பிராணிகளில் கதிர்ஒலி குறித்த பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சைத் துறைமூலம் “சிறிய பிராணிகளில் கதிர்ஒலி” குறித்த பயிற்சி 17.10.2016 முதல் 21.10.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சார்ந்த 12 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். விரிவுரைகள், செயல்முறை விளக்கம், செய்முறைப் பயிற்சி, குழு விவாதம் மற்றும் தன் மதிப்பீடு ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றன. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரியின் முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

### பயனாளிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மூலம், கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறையில் செயல்படுத்திவரும் “தனுவாஸ் தாதுப்புக் கலவையைப் பிரபலப்படுத்துதல்” மற்றும் “குறைந்த விலைத் தீவனப்பொருளாக அசோலா” குறித்த நபார்டு வங்கியின் நிதியுதவித் திட்டப் பயனைப் பரிமாற்றும் வகையில் “பயனாளிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்” நிகழ்ச்சி 25.10.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு



அவர்கள் தலைமையுரை ஆற்றினார். சென்னை, நபார்டு வங்கியின் முதன்மைப் பொது மேலாளர் திரு. எஸ். நாகூர் அலி ஜின்னா அவர்கள் பயனாளிகளுக்கு தனுவாஸ் தாதுப்புக் கலவை மற்றும் அசோலா நாற்றுகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். சென்னை, இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் டாக்டர் ஜெ. சதகத்துல்லா அவர்கள் ''செயல்முறை விளக்கம்மூலம் அசோலாச் சாகுபடி'' குறித்த வீடியோ பாடத்தை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். திருநெல்வேலி, நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் டாக்டர் ஆர். ராமலிங்கம் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். மொத்தம் 131 நபார்டு உழவர் மன்ற உறுப்பினர்கள் பயன்பெற்றனர்.

### மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி




ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் கல்லூரியின் இறுதியாண்டு பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். மாணவர்களுக்காக மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 05.10.2016அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, மருந்து நிறுவனங்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் அவர்கள் வினாடி வினாப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்ற 15 மருந்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் மருந்து மாதிரிகளைக் காட்சிக்கு வைத்து , மாணவர்களுக்கு விளக்கினர்.

### மாநிலங்களுக்கு இடையேயான ஆத்மா பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிமையமும்நாமக்கல், வேளாண் அறிவியல்நிலையமும் இணைந்து கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 20 முன்னோடிப் பண்ணையாளர்களுக்கு மாநிலங்களுக்கு இடையேயான ஆத்மா பயிற்சியை 02.10.2016 முதல் 08.10.2016 வரை நடத்தின. பயிற்சியின் ஒரு பகுதியாக, பயிற்சியாளர்கள் கேரள மாநிலத்தின் மலம்புழாவில் உள்ள கறவை மாட்டுத் தீவன ஆலை, தோனியில் உள்ள கால்நடைப் பண்ணை, மலப்புரம் வேளாண்மை அறிவியல் நிலையம், மண்ணுத்தியில் உள்ள கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரி, மாட்டுப்பட்டியில் உள்ள உயர் தொழில்நுட்பத் தாய்க் காளைப் பண்ணை ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

- பெரம்பலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்;றும் ஆராய்ச்சி மையம் சார்பாக, பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சார்ந்த 20 முன்னோடிப் பண்ணையாளர்களுக்கு மாநிலங்களுக்கு இடையிலான ஆத்மா பயிற்சி 02.10.2016 முதல் 08.10.2016 வரை நடத்தப்பட்டது. பூக்கோடு கால்நடை மருத்துவக் கல்லூரி, மில்மாவின் பால் உற்பத்திச் சங்கங்கள், பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் உற்பத்திப் பிரிவுகள், தீவன ஆலைகள், தனியார் கறவை மாட்டுப்பண்ணை, கேரள வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றைப் பண்ணையாளர்கள் பார்வையிட்டனர்.

### பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் ''இலாபகரமான ஆடு வளர்ப்புப் பயிற்சி'' 17.10..2016 முதல் 25.10.2016 வரை நடைபெற்றது. பயிற்சியில் 5 பண்ணை மகளிர் உட்பட மொத்தம் 30 பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் சான்றிதழ் மற்றும் புத்தகம், தாதுப்புக் கலவை, பசுந்தீவனக் கரணைகள் மற்றும் கிருமிநாசினிகள் ஆகிய இடுபொருட்கள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின் நிதியுதவியுடன் ''கிராமப்புறப் பன்முகச் செயற்கை முறைக் கருவூட்டாளர்'' குறித்த ஐந்தாம் பிரிவுப் பயிற்சி 21.09.2016முதல் 20.10.2016வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 42 பேர் பயிற்சி பெற்றனர்.

- வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ''பசுந்தீவன உற்பத்தி'' குறித்த சிறப்பு வளாகப் பயிற்சி 28.10.2016அன்று நடத்தப்பட்டது. வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 7 விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் மாண்புமிகு தமிழக முதல்வரின் விலையில்லா வெள்ளாடு வழங்கும் திட்டத்தின் 84 பயனாளிகளுக்கு ''வெள்ளாடு வளர்ப்பு'' குறித்த பயிற்சி 15.10.2016 அன்று பாலக்கோடு வட்டம், பண்டாரஹள்ளியில் அளிக்கப்பட்டது.

### வன உயிரின வார விழா

- **சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி:** கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையின் வனவிலங்கு மன்றம்மூலம் பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்து வனஉயிரின வார விழா 02.10.2016 முதல் 08.10.2016வரை கொண்டாடப்பட்டது. வனவிலங்குப் பாதுகாப்பு குறித்த கண்காட்சி இந்திய உலக வனவிலங்கு நிதியத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் கண்காட்சியைத் துவக்கிவைத்தார். 08.10.2016அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் உலக வனவிலங்கு நிதியத்தின்

சென்னையில் உள்ள தமிழ்நாடு அலுவலகத்தின் கலோனல் சனத் கோபிநாத் அவர்கள் பங்கேற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன்அவர்கள் கல்லூரியின் வனவிலங்கு மன்ற அறிக்கை அளித்தார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் வனவிலங்குப் பாதுகாப்பு குறித்து உரையாற்றினார். புதுதில்லி, தேசிய உயிரியல் பூங்காவின் முன்னாள் கால்நடை மருத்துவர் என். பன்னீர்செல்வம் அவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

- **ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியில் வனஉயிரின வார விழா 03.10.2016 முதல் 07.10.2016 வரை கொண்டாடப்பட்டது. இதனையொட்டி




வனவிலங்கு குறித்த வினாடிவினா, வனவிலங்குப் புகைப்படப் போட்டி, வனவிலங்கு குறித்த வண்ணக்கோலப் போட்டி, கண்டம் தாண்டும் பறவைகள் குறித்த வட்ட மாநாடு, கால்நடை மருத்துவ மாணவர்களுக்கு 'உறை நிலையில் வனஉயிரினப் பாதுகாப்பு' மற்றும் பள்ளி மாணவர்களுக்குக் கலந்துரையாடல் வினாடிவினா ஆகியவை நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் முன்னிலையில் தஞ்சாவூர் வனத் துறை அதிகாரி திரு. சா. குருசாமி, இ.வ.ப., அவர்களால் கல்லூரியின் வனவிலங்கு மன்றம் துவக்கி வைக்கப்பட்டது. பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மொத்தம் 32 பரிசுகள் வழங்கப்பட்டன.

- **திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** பேச்சு, கட்டுரை எழுதல், வண்ணம் திட்டுதல், வினாடிவினா, வண்ணக்கோலம் மற்றும் வனவிலங்குப் புகைப்படம் ஆகிய பல்வேறு போட்டிகளுக்குக் கல்லூரியில் ஏற்பாடு செய்து வனஉயிரின வார விழா 18.10.2016 முதல் 21.10.2016வரை கொண்டாடப்பட்டது. இதன் பரிசளிப்பு நிகழ்ச்சி 21.10.2016அன்று நடைபெற்றது. திருநெல்வேலி பிரிவு வன அலுவலர் திரு. பிள்ளைவிநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிப் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, வனவிலங்கு குறித்த மடிப்பிதழ் வெளியிட்டார்.

## உலக முட்டைத் தின விழா

- **நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பில் நாமக்கல் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு மற்றும் கெமின் தீவன நிர்வாகத்துடன் இணைந்து உலக முட்டை தின விழா 14.10.2016 அன்று கடைப்பிடிக்கப்பட்டது. இலவச முட்டை விநியோகப் பேரணி நடைபெற்றது. பேரணியின்போது 20,000 வேக வைத்த முட்டைகள் பொதுமக்கள், குழந்தைகள் மற்றும்



நாமக்கல் அரசு பொது மருத்துவமனை நோயாளிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் டாக்டர் எம்.ஜெ. ராஜா மற்றும் டாக்டர் கே. தேவிபிரியா ஆகியோருடன் மொத்தம் 25 மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

- **திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** உலக முட்டைத் தின விழா–2016, 14.10.2016அன்று கல்லூரியில் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, உரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் திட்டக் குழு உறுப்பினர் மற்றும் அன்னை சிக்கன் தனியார் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. எம். மகாலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகத் தயாரிக்கப்பட்ட பல்வேறு முட்டைப் பொருட்கள் அனைத்து மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

- **ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி:** உலக முட்டைத் தினத்தை முன்னிட்டு, கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு சார்பாக ஓசூரின் இருவேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி 19.10.2016அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் ஊட்டச்சத்து மதிப்பை மற்ற கால்நடைப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்களுடன் ஒப்பிட்டுக் காட்டும் வகையிலான மடிப்பிதழுடன் அவித்த முட்டை இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 2000 பொது மக்கள் பயன்பெற்றனர்.

## குடற்புழு பரிசோதனை வாரம் கடைப்பிடிப்பு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் செல்லப் பிராணிகளுக்குக் குடற்புழு பரிசோதனை வாரம் 17.10.2016 முதல் 23.10.2016 வரை கடைப்பிடிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 104 குடற்புழு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டது. உதவிப் பேராசிரியர்கள் டாக்டர் அன்பரசி மற்றும் டாக்டர் ஆர். வேலுசாமி ஆகியோர் மாதிரிகளை ஆய்வுசெய்தனர்.

## கால்நடை நல முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் கால்நடை நல முகாம் திருப்பணிகரிசல்குளத்தில் 26.10.2016அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். மொத்தம் 1384 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## பொருட்காட்சியில் பங்கேற்பு

தஞ்சாவூரில் 12.10.2016 முதல் 26.10.2016 வரை 45 நாட்களுக்கு நடைபெற்ற தமிழக அரசின் அரசுப் பொருட்காட்சியில் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பங்கேற்றுப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயல்பாடுகளைக் காட்சிப்படுத்தியது. பல்வேறு

ஒட்டுண்ணிகள் மற்றும் நோய்கள் குறித்த படங்கள், பசுந்தீவனக் கரணைகள் மற்றும் பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் விளக்கப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

### மரக்கன்று நடும் நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பாகக் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி தேசிய ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியைத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. எம். கருணாகரன் இ.ஆ.ப. அவர்கள் 18.10.2016அன்று துவக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு, திருநெல்வேலி மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமையின் அலுவலர்கள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### ஊக்கமளிப்பு நிகழ்ச்சி

தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் தத்தெடுக்கப்பட்ட பெரியூர் கிராமத்தில் 25.10.2016 அன்று ‘‘ஆலம்பாடி மாட்டினப் பாதுகாப்பு’’ குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் 15 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். மேலும், பெரியூர் கிராமத்தில் பயிலும் 86 உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக 15.10.2016அன்று உயர் கல்வி வாய்ப்புகள் குறித்த ஊக்கமளிப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு ஆய்வு அறிஞர் விருது




அமிர்தசரஸ், கல்சா கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரியில் 22.10.2016அன்று நடைபெற்ற 15ஆவது பட்டமளிப்பு விழா மற்றும் ‘‘உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கு நீடித்த கால்நடை வளர்ச்சி’’ குறித்த தேசியக் கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களுக்கு தேசியக் கால்நடை மருத்துவ அறிவியல் கழகத்தின் ஆய்வு அறிஞர் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டது.

### துணைவேந்தர் ஆய்வு



முனைவர் சு. திலகர், துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அவர்கள் துறைசார் ஆய்வினை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 07.10.2016, 08.10.2016.அன்றும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.10.2016 அன்றும் நடத்தினார்.

### மாணவர் பங்கேற்பு



சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிமூலம் ‘‘ப்ரதர்ஷினி–2016’’ என்னும் பெயரில் 28.09.2016 முதல் 02.10.2016 வரை நடத்தப்பட்ட கல்லூரிகளுக்கு இடையேயான பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 22 மாணவர்கள் பங்கேற்றனர். நான்காம் ஆண்டு மாணவிகள் செல்வி எஸ். ஹரிபிரியா மற்றும் செல்வி கே. ஜெயலட்சுமி ஆகியோர் அந்தக்ஷரியில் முதல் பரிசு வென்றனர். 17.10.2016அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கலைநிகழ்ச்சியில் வெற்றிபெற்ற மாணவர்களைப் பாராட்டினார். மேலும், வெற்றிபெற்ற மற்றும் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

**சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி:** கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் கல்லூரியின் தேர்வுக் கூடத்தைத் தூய்மைப்படுத்தி, தூய்மை இந்தியா திட்டம் 07.10.2016அன்று கடைப்பிடிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் தூய்மை இந்தியா திட்டம் குறித்து விளக்கினார். 40 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் பங்கேற்றனர். மேலும், ‘‘தூய்மை இந்தியா’’ மற்றும் ‘‘குப்பை மூலம் வருவாய்’’ குறித்து ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. மொத்தம் 17 மாணவர்கள் பங்கேற்றனர்.

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** மகாத்மா காந்தி அவர்களின் 150ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவு சார்பில் ‘‘தூய்மை இந்தியா’’ திட்டத்தின் கீழ் 02.10.2016 அன்று தூய்மைப்படுத்தும் பணியானது மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 100 தன்னார்வ மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் எம்.ஜே. இராஜா மற்றும் மருத்துவர் க. தேவிப்பிரியா ஆகியோர் பங்கேற்றுத் தூய்மைப்படுத்தும் பணியினை மேற்கொண்டனர்.

**ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டப் பரிவின் மூலம் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ‘‘வளாகத் தூய்மைப்படுத்துதல் பணி’’ 19.10.2016அன்று நடைபெற்றது. 140 மாணவர்கள் கலந்து கொண்டு விடுதி வளாகம் சுத்தம் செய்தலை மேற்கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் க. ந. செல்வக்குமார் அவர்கள் தூய்மை இந்தியா உறுதி

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Posted on 29.11.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051

**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

மொழிக்குத் தலைமையேற்று, தூய்மை இந்தியா இயக்கம் குறித்து உரையாற்றினார். நிகழ்ச்சியை நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் முனைவர் வ. ரங்கநாதன் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

### முக்கிய பல்கலைக்கழக நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 13.10.2016 | : | பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் |
| 26.10.2016 | : | பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் |
| 27.10.2016 | : | மேய்க்கால் புறம்போக்கு ஆய்வுக் கூட்டம் |

### புதிய அச்சியந்திரம் துவக்க விழா



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 06.10.2016அன்று பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவில் புதிய டிஜிட்டல் இங்க்ஜெட் வண்ண அச்சியந்திரத்தைத் துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன், நூல் வெளியீட்டுப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சி. மணிவண்ணன் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் பண்ணைக் கழிவு மேலாண்மைப் பிரிவுகள் துவக்கம்

அதிக உற்பத்திக்குப் பண்ணைத் தொழில்நுட்பங்களில் மாற்றத்தை அறிமுகப்படுத்தும் வகையில் வாத்துடன் மீன் வளர்ப்பு, பன்றியுடன் மீன் வளர்ப்பு, ஆட்டுடன் நாட்டுக்கோழி வளர்ப்பு, கோழியுடன் அசோலா உற்பத்தி, கால்நடை வளர்ப்புடன் உயிர்வளி மற்றும் மண்புழு, முயலுடன் தீவன மரங்கள், வான்கோழியுடன் மேய்ச்சல் தரை, எருமையுடன் குளியல் தொட்டி மற்றும் காய்கறித் தோட்டம், வாத்துக் குட்டையுடன் இலையுள்ள காய்கறித் தோட்டப்



பிரிவுகள் பல்கலைக்கழகத்தின் செயல்முறைக் கால்நடைப் பண்ணை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளன. இப்பிரிவுகளைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 20.10.2016அன்று துவக்கிவைத்து, மீன்குஞ்சுகளை வாத்துடன்கூடிய மீன் வளர்ப்புக் குளத்தில் இருப்புச் செய்தார். மேலும், இவ்வளாகத்தில் இறந்த கோழிகள் மற்றும் கால்நடைகளைச் சிறந்த முறையில் பயன்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்ணைக் கழிவு மேலாண்மைப் பிரிவு ஒன்றையும் துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.




பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 17.10.2016அன்று நடைபெற்ற ஹரிகேன் வெட்ஸ் அறக்கட்டளையின் முதல் ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்றவர்களிடையே உரை நிகழ்த்துதல்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் பி. செல்வராஜ்
முனைவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்